செ.வெ.எண்-13 நாள்-07.10.2020

# பத்திரிக்கைசெய்தி

கரூர் மாவட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம் (தனி) மற்றும் குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் வரைவுவாக்குச் சாவடி மையங்களின் பட்டியல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மற்றும் குளித்தலை கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் வரைவு வாக்குச் சாவடி மையங்களின் பட்டியல் தொடர்பாக கோரிக்கை மற்றும் ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அவைகளை 15.10.2020-க்குள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ, அல்லது சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர்களிடமோ , வட்டாட்சியர்களிடமோ எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என கரூர் மாவட்டஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**